மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, சூரிய வெப்பத்திலே இருந்து மின்சாரம் பெறுவது என்பது ஆய்வுக்கட்டத்திலேதான் இருக்கின்றதே தவிர வணிக ரீதியாக இன்னும் செயல்படவில்லை. மேலும் அண்மையிலே கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தில் சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுப் பயன்படுத்துவதற்குரிய ஒரு திட்டம் இருந்தது. ஆனால் அதற்கு ஏராளமாக செலவு பிடிக்கும் என்று அரசு கருதுகிறது. ஆகவே அதுபற்றி மறுபரிசீலனை செய்து வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறுவது ஆய்விலே இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஜப்பான் நாட்டிலே சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெற்று பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஆகவே மின் வாரியம் இதிலே தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் சொன்னது பல இடங்களிலே அது பரீட்சார்த்தமாக இயக்கப்பட்டு வருகின்றது என்பதுதான். ஆகவே இது ஜப்பான் நாட்டிலே மட்டுமல்ல, அமெரிக்காவிலேயும் அவ்வாறு சோதனை முறையில் செய்யப்பட்டு வருகின்றது. நம்முடைய நாட்டிலேயும் சூரிய வெப்பத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி நம்முடைய விஞ்ஞானத் தொழில் கூடங்களும் ஆய்ந்து வருகின்றன. ஆகவே இது இயலாது என்பது அல்ல. அதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும் என்பது தான் பிரச்சினை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் பட்ட மேற் படிப்பு.

*வினா எண். 652—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியப் பட்ட மேற் படிப்பு தரம் குறைந்ததென்று கேரளப் பல்கலைக் கழகம் கூறியுள்ள குற்றச்சாட்டு பற்றி அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேரளப் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 1979-80 பி.எட். பட்டத்தை மீண்டும் அங்கீகரித்துள்ளது என்றும், இந்தப் பட்டத்திற்கு உரிய அங்கீகாரத்தை நிலையாக அளிக்க கேரளப்

1981 ஏப்ரல் 6]

பல்கலைக் கழகத்துடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆவன செய்து வருகிறது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆசிரியம் பட்ட மேற்படிப்புப் பட்டத்தை, கேரளப் பல்கலைக் கழகம் அங்கீகரித்து இருப்பதைப் பற்றிய தகவலைச் சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் பாட திட்டத்தைப் பொறுத்த அளவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டத்தையும் கேரளப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டத்தையும் ஒப்பு நோக்கியதால், அதிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கென வகுக்கப்பெற்ற பாட திட்டம், பலவற்றாலும், உயர்ந்தது, சிறந்தது என்ற கருத்து அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்னை பாட திட்டத்தினுடைய தரத்தைப் பற்றியது அல்ல. அஞ்சல் வழி கல்வித் திட்டம் என்ற அடிப்படையிலேதான் கேரள பல்கலைக் கழகம் இதை எதிர்த்திருக்கிறது. நாமே கூட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட வேண்டாமென்று கேட்டிருக்கிறோம். ஏனென்றால், பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள், அஞ்சல் வழி மூலம் பி.எட். படிக்கக்கூடிய ஒரு திட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வைத்திருந்தது. அது அவ்வளவு நல்லதல்ல. தொழில் நுட்பக் கல்வி போன்றவைகள் எல்லாம், சேர்ந்து படித்து அனுபவத்தினால் தெரிந்து கொள்ள வேண்டியவைகள். எனவே அஞ்சல் வழி கல்வி முறை இவைகளுக்குச் சிறந்தது அல்ல என்று நாமே கூட அதை எதிர்த்திருக்கிறோம். இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதனைத் திருத்திக் கொண்டிருக்கிறது. பணியில் வேலை செய்து கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு மட்டுமே இந்த அஞ்சல் வழி தற்போது அனுமதிக்கப்படுகிறது.

ஆகவே, பிரச்சனை தரத்தைப் பற்றியது அல்ல. யாருக்கு அந்தக் கல்வி அளிக்கப்படுகிறது என்பதைப் பற்றியதேயாகும். அதன் அடிப்படையில் தான் கேரளப் பல்கலைக் கழகமும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. நாமும் கிட்டத்தட்ட அதையேதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வற்புறுத்திச் சொல்லியிருந்தோம். இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அந்தப் பாட அமைப்பில் பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு மட்டும் என்ற வகையில் திருத்தம் கொண்டுவந்ததால், கேரளப் பல்கலைக் கழகமும் அதை மீண்டும் அங்கீகரித்துள்ளது.